## படிவம் எண். NCLT.3A
## மனு விவரங்கள் தொடர்பான விளம்பரம்
## (விதி 35 பார்க்க)
## தேசிய கம்பெனிகள் சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வு முன்பாக
## கம்பெனி மனு எண் CP/5/2017

பொருள்: **கம்பெனிகள் சட்டம், 2013 பிரிவு (14)** மற்றும் தேசிய கம்பெனி சட்டம் தீர்ப்பாய விதிகள், 2016, விதி (68)ன் படி பொது நிறுவனத்தைத் தனியார் நிறுவனமாக மாற்றுதல் தொடர்பாக.

மற்றும் பொருள்: **செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்**, கம்பெனிகள் சட்டம், 1956ன் கீழ் நிறுவப்பட்டது. ராணி சீதை அரங்கக் கட்டடம், 603, அண்ணா சாலை, சென்னை – 600 006, தமிழ்நாட்டில் பதிவு அலுவலகம் கொண்டது தொடர்பாக

**– கம்பெனி மனுதாரர்**

**மனு பற்றிய அறிக்கை**

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 14(1)ன் கீழ் செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட் (**"கம்பெனி"**) என்ற பொது நிறுவனத்தைத் தனியார் நிறுவனமாக மாற்றுவதற்கான மனு மாண்புமிகு தேசிய கம்பனிகள் சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வில் 2016ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 7ஆம் நாள் கம்பெனியால் தாக்கல் செய்யப்பட்டு, அந்த மனு மேற்படி தீர்ப்பாயத்தில் உள்ள அறை எண் 1 ல் 06.02.2017 அன்று காலை 10.30 மணிக்கு விசாரணைக்கு வருகிறது. மேற்படி மனுவை ஆதரிக்கவோ, எதிர்க்கவோ விரும்புபவர் தனது அறிக்கையின் நோக்கத்தைக் குறிப்பிட்டு தாங்களோ அல்லது தங்களது வழக்கறிஞரோ கையொப்பமிட்டு, பெயர் மற்றும் முகவரியுடன் மேற்படி மனு தீர்ப்பாயத்தில் விசாரணைக்கு வரும் நாளுக்கு இரண்டு நாட்களுக்கு முன் மனுதாரரின் வழக்கறிஞருக்குக் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும். மனுவை எதிர்க்கும் நபர் அதற்கான காரணங்களை தனது அறிக்கையில் குறிப்பிட்டோ அல்லது அதற்கான உறுதிமொழிப் பத்திரத்தையோ தனது அறிக்கையுடன் இணைக்க வேண்டும். மனுவின் நகல் பெற விரும்புபவர் கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து அதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகையை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

நாள்: 18.01.2017

கையொப்பமிடப்பட்டது.

AR. இராமநாதன்,

R. ஜவஹர்லால்,

E.வேதா பகத் சிங்

மனுதாரரின் வழக்கறிஞர்கள்

பழைய எண். 6, புதிய எண். 11,

முதல் மெயின் ரோடு, சி.ஐ.டி. காலனி, மயிலாப்பூர்,

சென்னை – 600 004.

தமிழ்நாடு, இந்தியா